2025-ம் ஆண்டு வாக்குத்தத்தம்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. யோசுவா 1:5

# பரிசுத்த பர்வதம்

## செய்தி மலர்

அக்டோபர் மாத இதழ்

# உன்னை மேன்மைப்படுத்துவேன்.

யோசுவா 3:7



# I WILL BEGIN TO Exalt you.

JOSHUA 3:7


Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்

Pr. S. காலேப் ராபர்ட் M.Div.,



| HMSM | XXVII | OCT |

# சபையின் இலக்குகள் – 2025

1. மொத்த விசுவாசிகளின் எண்ணிக்கை 5000
2. மொத்த பராமரிப்புக்குழுக்களின் எண்ணிக்கை 300
3. மொத்தம் 50 மிஷனெரிகளை வட இந்தியாவில் தாங்குதல்
4. மிஷனெரிகளுக்கு மாதம் ரூ.3,00,000/- (3 லட்சம்) அனுப்புதல்
5. சபைக்கு 2 ஏக்கர் நிலம் வாங்குதல் (Revival Centre)
6. கிளை சபை 2 ஆரம்பித்தல்
7. சபைக்கு 2 வேன் வாங்குதல் (ரூ 20 லட்டி)
8. வட இந்தியாவில் 2 ஆலயங்கள் கட்டுதல்
9. முழங்கால் ஜெப யுத்த வீரர்கள் 500 பேரை எழுப்புதல்
10. ஞானஸ்நானம் 200 நபர்களுக்கு
11. முழு நேர ஊழியர்கள் 2, மிஷனெரிகள் 2 எழுப்புதல்
12. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களிலிருந்து ஜனங்கள் ஆராதனைக்கு வர
13. மீனாட்சிபட்டியில் ஆலயம் கட்டுதல்
14. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களில் ஜெப யுத்தம் 2 முறை செய்தல்
15. தலைவர்களுக்கான ஊழிய பயிற்சி 2 நடத்துதல்
16. அதிகாலை ஆராதனைக்கு சபையில் 250, Online இல் 1000 நபர்களை கூட்டி சேர்த்தல்
17. சபையிலிருந்து வட இந்தியாவுக்கு மிஷன் பிரயாணம் செய்தல் (குழுவாக)
18. சபையின் கல்லறைத் தோட்டத்தை விரிவாக்கம் செய்தல்
19. V.B.S சிறப்பாக 150 இடங்களில் நடத்துதல்
20. சிறுவர் முகாம் 1
21. வாலிபர் முகாம் 1
22. பெண்கள் முகாம் 1
23. புருஷர்கள் முகாம் 1
24. மாதந்தோறும் நடைபெற்று வருகிற அமாவாசை ஜெபத்தில் 120 பேர் கூடுதல்

# நமது சபையின் ஊழியங்கள் 15 வகை

1. கிராம ஊழியம்
2. பத்திரிக்கை ஊழியம்
3. மிஷனெரி ஊழியம்
4. T.V ஊழியம்
5. மருத்துவமனை ஊழியம்
6. ஜெப நடை ஊழியம்
7. சிறுவர்கள் ஊழியம்
8. பின்தொடர் ஊழியம்
9. நேசக்கரங்கள் ஊழியம்
10. ஜெப யுத்த ஊழியம்
11. மாணவர்கள் மத்தியில் ஊழியம்
12. பராமரிப்புக்குழு ஊழியம்
13. ஆலோசனை ஊழியம்
14. மீடியா ஊழியம்
15. C.O.C ஊழியம்.

இந்த மாத வாக்குத்தத்தம்

# உன்னை மேன்மைப்படுத்துவேன்.

**யோசுவா 3:7**

## ஆசிரியரிடமிருந்து...

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த 9 மாதங்களை கடந்து வர தேவன் கிருபை பாராட்டினார். இந்த 10 வது மாதம் தேவன் உங்களை மேன்மைப்படுத்துவார்.

எவர்கள் உங்களை அற்பமாய் பார்த்தார்களோ, அவர்கள் கண்களுக்கு முன்பாக அற்புதமாய் தேவன் உங்களை உயர்த்துவார்.

உங்களோடு தேவன் இருப்பதே நிருபிக்கும் மாதமாக தேவன் இந்த மாதத்தை உங்களுக்கு ஆசீர்வாதமாக்குவார்.

தேவனோடு உள்ள உறவு, தேவன் கொடுத்த ஆவிக்குரிய சபையோடு உள்ள உறவு, தேவன் கொடுத்த ஆவிக்குரிய தகப்பன் (போதகர்) குடும்பத்தோடு உள்ள உங்கள் உறவை பெலப்படுத்துங்கள்.



**தேவன் உங்களையும் உங்கள்**
**குடும்பத்தையும்**
**ஆசீர்வதிப்பாராக...**

**Rev. Dr. J. Samuel Jebaraj**

ஆண்கள் பகுதி

# பணம்

பணத்தைக் கையாளுவதைக் குறித்து இளம் வயதிலே போதிக்காததினால் இன்று அநேகருடைய வாழ்க்கை கடனில் மூழ்கிக் கொண்டிருக்கின்றது. ஒவ்வோரு குழந்தையும் கர்த்தருக்குப் பிரியமான வழியில் பணத்தைக் கையாள கற்றுக்கொள்வது அவசியமாகும். எனவே, பணம் சம்பாதிக்க மட்டுமல்ல, அதை ஞானமாய் செலவிடவும் சொல்லிக் கொடுங்கள்.

**1. வரவு செலவு பட்ஜெட்டை எளிய விதத்தில் கற்றுக்கொடுங்கள்:**

பிள்ளைகளுக்கு மூன்று பாக்ஸ்களைக் கொடுத்து முதல் பாக்ஸில் கர்த்தர் என்றும் அடுத்த பாக்ஸில் சேமிப்பு என்றும் கடைசி பாக்ஸில் செலவுக்கு என்றும் எழுதி அவர்களுடைய பாக்கெட் மணியைப் பிரித்து முதலில் கர்த்தருக்கும், பின் சேமிப்புக்கும் மீதியை செலவிட வேண்டும் என்று கற்றுக்கொடுங்கள். கர்த்தருக்குக் கொடுப்பதன் ஆசீர்வாதத்தை எடுத்துச் சொல்லுங்கள். அதுமட்டுமல்லாமல் தேவையிலுள்ளவர்களுக்கு உதவும் இரக்க சுபாவத்தையும் ஏற்படுத்துங்கள். சிறுவயதில் இருந்தே பிள்ளைகள் சேமிக்க பழகும் விதமாக ஒரு வங்கி சேமிப்புக் கணக்கை துவங்கி சேமிப்பை பழக்குவியுங்கள்.

**2.காத்திருத்தலைக் கற்றுக்கொடுங்கள்:**

ஆசைப்படுவதை எல்லாம் அல்ல. அவசியமானவைகளையே வாங்க வேண்டும் என்பதை சொல்லிக் கொடுங்கள். பிள்ளைகள் அழுது அடம்பிடித்துக் கேட்கிற எதையும் உடனே வாங்கிக் கொடுக்காதீர்கள். போதுமான பணம் கையில் இல்லாத போது ஜெபித்து, கர்த்தர் தரும் வரை காத்திருந்து விசுவாசத்தோடு பெற்றுக்கொள்ள போதியுங்கள்.

**3.வீட்டுவேலைகளை பிள்ளைகளுக்குப் பகிர்ந்து கொடுங்கள்:**

இளம்பருவத்திலிருந்தே வீட்டுவேலைகளைப் பகிர்ந்து கொடுங்கள். அவர்களுடைய வேலையை அவர்களே செய்யப் பழக்குவியுங்கள். சோம்பேறித்தனத்திற்கு இடம்கொடாமல் வீட்டு வேலைகளை பொறுப்பாகவும் நேர்மையாகவும் செய்ய கற்றுக்கொடுங்கள். வழக்கமான வேலைக்கும் கூடுதலான வேலை செய்யும்போது, உதாரணமாக வாகனங்களை துடைத்தல், உங்கள் தொழிலில் உதவி செய்தல் போன்றவற்றிற்கு வெகுமானம் கொடுத்து பிள்ளைகளை ஊக்கப்படுத்துங்கள். பிள்ளைகள் காலேஜ் செல்லத் துவங்கும்போது பகுதி நேர வேலை செய்ய பழக்குவியுங்கள். இதனால் அவர்கள் உழைப்பின் மேன்மையையும், பணத்தின் அருமையையும் இளம் வயதிலேயே கற்றுக்கொள்வார்கள்.

பணத்தை உண்மையுடன் கையாளுவதை குறித்த போதனைகளை சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பது நமது கடமையாகும். இதுவரை நீங்கள் அதை செய்யாவிட்டால் இன்றிலிருந்தே செயல்படுங்கள். ஒரு சிறந்த எதிர்கால சந்ததியை தேவனுக்காக உருவாக்குங்கள்.

புருஷர் ஐக்கிய கூட்டம்
திங்கட்கிழமை தோறும்
இரவு 8.00 –8.45 மணி வரை
இணைந்து ஜெபிக்க யாவரையும்
அன்புடன் அழைக்கிறோம்..

# நிலைத்திருங்கள்

பெண்கள் பகுதி

Mrs. பெர்சியாள் ஜெபராஜ்

ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் பெண்களாகிய உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். சுகமாயிருக்கிறீர்களா! பெண்களாகிய நம்முடைய வாழ்வில் எத்தனையோ பிரச்சனைகளை சந்திக்கிறோம். அநேக நேரங்களில் கவலைப்பட்டு கலங்குகிறோம். மனப்பிரச்சனை சரீர பிரச்சனையாகி வேதனைகளை அநுபவிக்கிறோம். எவ்வளவோ தேவ வார்த்தைகளைக் கேட்டாலும், சில காரியங்களில் இருந்து மீளமுடியவில்லை. அதைரியப்பட்டுவிடுகிறோம். இந்த இதழின் வாயிலாக திடமனதாயிருங்கள், கர்த்தருக்குள் நிலைத்திருங்கள். இயேசுவே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார். அவராலே அன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை என்பதை நினைப்பூட்டுகிறேன். எதிலெல்லாம் நாம் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும்எனப் பார்ப்போம்.

1. விசுவாசத்தில் நிலைத்திருங்கள்:

நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இயேசு கூறும்போது, விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். நீ விசுவாசித்தால் தேவ மகிமையைக் காண்பாய். உன் விசுவாசத்தின் படியே ஆகக்கடவது என்று. இயேசு வந்தவர்களிடம், இதை நான் செய்ய முடியும் என் விசுவாசிக்கிறாயா? எனக் கேட்டாரே. பெண்களே! இந்த நாட்களில் சூழ்நிலையைக் கண்டு சோர்ந்து போகிறோம், அவிசுவாசப்பட்டு கேள்விக் கேட்டுக் கொண்டே இருக்கிறோம் அல்லவா! எல்லாவற்றிற்கும் முடிவு உண்டு என்ற விசுவாசத்தில் நிலைத்திருங்கள். ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடவேமாட்டார். அற்புதங்களைக் காண்பீர்கள்.

2.வசனத்தில் நிலைத்திருங்கள்:

தேனிலும், தெளிதேனினும் மதுரமாகிய தேவனுடைய வார்த்தை, குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாகிய வசனம். நம் வாழ்வில் உள்ள நிறை, குறைகளைக் காட்டும் கண்ணாடியாகிய வசனம். கடைசி வரை வந்து நம்மை நியாயந்தீர்ப்பதும் வசனமே. இயேசு கூறும் போது என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான். இயேசுவே உம்மை நேசிக்கிறேன் என்று சொல்பவர்கள் வசனத்தில் நிலைத்திருப்பார்கள். பெண்ணே! நீங்கள் எப்படி? கர்த்தருக்குக் பயப்படுக்கிற பயம் உங்கள் இருதயங்களில் காணப்படுவதாக. பிழைப்பீர்கள்.

3. ஜெபத்தில் நிலைத்திருங்கள்:

ஜெபமே ஜெயம். உங்கள் வாழ்வில் ஜெயம் வேண்டுமானால் ஜெபம் அவசியம். பத்திரத்தில் கையெழுத்து வைக்கப்பட்டது என அறிந்தபோதிலும், தான் முன் செய்து வந்தபடியே, தினம் மூன்று வேளையும் ஜெபம் செய்தானே, தானியேலுக்கு பிரச்சனை வந்தது, ஆனால் பிரச்சனையால் ஜெபத்திற்கு முன் நிற்க முடியவில்லையே. பெண்களே! தானியேலின் காரியம் ஜெயமாயிருந்ததுபோல உங்கள் காரியங்கள் ஜெயமாய் முடிய வேண்டுமானால் ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள் . இயேசுவில் நிலைத்திருங்கள். உங்கள் காரியம் வாய்க்கும். அதை யாராலும் தடுக்க முடியாது.

பெண்கள் ஆராதனை

செவ்வாய் தோறும் காலை
10:00 -11:30
மணி வரை நமது சபையில்
வைத்து நடைபெறுகிறது.



LIVE STREAMING




# பாடுகள் பேசும் பாதையாகும்

பொறுப்பு: Pr. காலேப் ராபர்ட்
உதவி: Bro. பிலிப்

கிறிஸ்துவுக்குள் தெரிந்துக்கொள்ளப்பட்ட தேவனின் கண்மணிகளே, உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். நாட்களும் காலங்களும் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் இவ்வுலகில் அதே வேகத்தில் நாமும், நம் வாழ்வில் மிக முக்கியமானது எது என்பதை மறந்து விடுகிறோம்.

கடந்த மாதம், உலகையே உலுக்கிய அமெரிக்காவின் சார்லி கிர்க்- இன் மரணம் குறித்து கேள்விப்பட்டு இருப்பீர்கள். ஒரு கல்லூரியில் தேவனுக்குள் வாழ்வதைக் குறித்து வாலிபர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அதை பிடிக்காத வாலிபர் ஒருவர் அவரை சுட்டுக் கொன்றுவிட்டார். முழு உலகத்தையும் வேதனையில் ஆழ்த்திய ஒரு சம்பவமாக இது மாறிற்று. தங்கள் சொந்த குடும்பத்தில் ஒருவரை இழந்தது போல ஜனங்கள் வருந்தினார்கள். நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவு உலகில் பாவமும் பெருமையும் ஜனங்கள் இடையே பிளவும் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது.

அதின் அடுத்து நடந்த காரியம் தான் எல்லோரையும் ஆச்சர்யப்பட வைத்தது. தன் கிறிஸ்தவ நம்பிக்கையை பகிர்ந்ததிற்காக அவரை கொன்றார்கள் என்றால் நான் இன்னும் அதிகமாக பகிர்வேன் என்று ஒரு மிகப்பெரிய சேனை எழும்பிற்று. நான் கடந்த 40 வருடமாக சபைக்கு செல்லவில்லை, இந்தவாரம் செல்கிறேன் என்று இன்னொருவர் சொன்னார். அமெரிக்கா முழுவதும் செப்டம்பர் 14ம் தேதி சபை நிரம்பி வழிந்தது என்று சொன்னார்கள். கொன்றுவிட்டால் பேசுவதை நிறுத்திவிடுவான், மற்றவர்கள் பயந்து விடுவார்கள் என்று எண்ணினான்.ஆனால் ஒருவர் இரத்த சாட்சியாக மரித்தார், லட்சக்கணக்கான சார்லி கிர்க்கை தேவன் எழுப்பியிருக்கிறார்.

அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன்கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள்.- பிலிப்பியர் 1:14

அன்று சீஷர்களை கொன்றார்கள், பின்னர் சுவிசேஷம் சொன்னவர்களை கொன்றார்கள். இன்றும் கூட இயேசுவை தேவனாக கொண்டிருக்கும் ஜனங்களுக்கு பல்வேறு நெருக்கங்கள் - வேலையிடத்தில், குடும்பத்தில், சமுகத்தில். ஆனால் இவையெல்லாவற்றின் மத்தியிலும் தேவன் உங்களோடு இருந்து அவர் மகிமைப்படுவார், உங்களை சுகமாய் நடத்துவார்.

உங்கள் வாழ்வில் கட்டுகள், பாடுகள், வியாதி, வறுமை, வேதனைகள் என்று பாரங்கள் உங்களை அழுத்துகின்றதா? உங்கள் சூழ்நிலை இன்னோருவருக்கு ஆசீர்வாதமாக மாறும். உங்களை சாட்சியாக தேவன் நிறுத்துவார். நம்பிக்கையை மட்டும் விடாதிருங்கள். நம் வாழ்க்கை தேவ கரத்தில் இருக்கிறது. உலகமும் மனிதர்களும் நம் முடிவை தீர்மானிப்பது இல்லை. இவ்வுலகில் நம் ஒரே நோக்கம்- எப்படியாவது சிலரையாகிலும் இயேசுவுக்குள் நடத்தனும். வாலிப வயதில் வேலை, பணம், காதல், இச்சை, கவுரவம் (பெருமை), நண்பர்கள் என்று பிசாசு திசைத்திருப்ப போராடுவான், விசுவாசத்தை உடைக்க முயற்சிப்பான். விட்டுவிடாதிருங்கள். இயேசு ஜெயித்தார், நாமும் ஜெயிப்போம்.



# ஜெனியின் விசுவாசம்

பொறுப்பு: Mrs. லீலிதனராஜ்

## அன்பான சிறுபிள்ளைகள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்



பெல் பாஸ்ட் பட்டணத்திற்கு அருகில் ஒரு கிராமத்தில் ஜெனி என்ற சிறு பெண் தேவனிடத்தில் பயபக்தியுள்ள பெற்றோருடன் வசித்துவந்தாள். ஒரு நாள் அவளுடைய பெருவிரலில் காயம் ஏற்பட்டது. ஆனால் அதனை கண்டுக்கொள்ளவில்லை. காயம் பெரிதாகி பெருவிரல் வீங்கியதால்நடக்க முடியவில்லை. வலி அதிகமானதால் மருத்துவரிடம் அழைத்து சென்றனர். மருத்துவர் பரிசோதித்து பெருவிரலை எடுத்துவிடவேண்டும் இல்லையென்றால் காலுக்கே ஆபத்தாகி விடும் என்றனர். இன்னோரு மருத்துவரையும் கலந்தலோசித்தார்கள். அவரும் எடுத்துவிட வேண்டும் என்றே கூறினார். ஜெனியின் பெற்றோருக்கு காலின் பெருவிரலை எடுப்பதில் சம்மதமே இல்லை. கடைசியில் சில மருத்துவர்கள் ஒன்றாக இணைந்து ஆலோசித்து குறிப்பிட்ட தினத்தில் அறுவை சிகிச்சை செய்ய நிர்ணயித்தார்கள்.



ஜெனிக்கு அறுவைசிகிச்சையை நினைத்து தூக்கம் வரவில்லை. விசுவாசத்தோடு அறுவை சிகிச்சை இன்றி குணமாக வேண்டும் என்று ஜெபித்தாள். ஜெபித்து முடித்ததும் சிறிது நேரத்தில் தூக்கம் வந்தது. கனவில் சிவப்பு நிற தலைமுடியுடைய பெண் டாக்டர் ஒருவர் வெண்மையான ஏப்ரான் கட்டிக்கொண்டு தன் காயத்தை அறுவை சிகிச்சையின்றி குணமாக்கியதை கண்டாள். ஜெனி விழித்த போது அதிக சந்தோஷத்துடன் தன் கனவைப் பெற்றோரிடம் கூறினாள். அவர்கள் ஆச்சரியப்பட்டனர். மறுநாள் பட்டணத்திற்கு சென்று விசாரித்தபோது அப்படியோரு மருத்துவர் இருப்பதாக அறிந்து அவரிடம் சென்றனர். ஜெனி கனவில் கண்டபடியே அந்த பெண் மருத்துவர் இருந்தார். தேவனின் நடத்துதலை அவர்கள் கூறியபோது பெண் மருத்துவர் ஆச்சரியப்பட்டார்.

ஜெனியின் காயத்தை பரிசோதித்து சுத்தம் செய்து மருந்து வைத்து கட்டினார். மூன்று தினங்களில் காயம் குணமானது. ஒரு மாதத்திற்குள்ளாகவே நன்றாக நடக்க ஆரம்பித்தாள். சுகம் தந்த தேவனுக்கு குடும்பமாக நன்றி கூறினார்கள்.

அன்பான சிறுபிள்ளைகளே! ஜெனியைப் போல நாமும் பிரச்சனை நேரத்தில் விசுவாசத்தோடு ஜெபித்தால் அற்புதத்தைப் பெற்றுக் கொள்ளலாம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

## மனப்பாடவசனம்: சங்கீதம் 103:17

**கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள் மேலும் அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது.**

சிறுவர் ஊழியப் பொறுப்பாளர்கள் & நடைபெறும் இடங்களைப் பற்றி தெரிந்திக்கொள்ள QR ஐ Scan செய்யவும்.

**CHILDREN'S TIME**
வாரந்தோறும் மாலை 5:00 மணி அளவில் சிறுவர் நேரம் நமது சபையின் யூ டியூப் சேனலில் ஒளிபரப்பப்படும்.

# நமது சபை தாங்கும் ராஜஸ்தான், குஜராத், டெல்லி, பஞ்சாப், அசாம் ஊழியங்கள்.

**நமது சபை தாங்கும் 38 மிஷனெரிகளும், 4 மிஷன் பிள்ளைகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள், உற்சாகமாய் கொடுங்கள்.**

**மாதம் தேவை: ரூ.1,96,100** பொறுப்பு: Bro. அர்னால்டு



**Pr. Daniel Babu**
*Gujarath*



**Pr. Stephen Rathod**
*Rajasthan*



**Pr. Mandeep kidhay**
*Moga*



**Pr. Chaman Masih**
*Ablowal*



**Pr. Binu Vijayan**
*Tripuri*



**Pr. SawarGill**
*Gurdaspur*



**Pr. Peter Masig**
*Taran Taram*



**Pr. Sandeep Singh**
*Chunnai Kalan*



**Pr. Inderjit Singh**
*Mohali*



**Pr. Prasenjit Basumatary**
*Assam*



**Pr. Karthick**
*Chandigarh*



**Pr. Gurdial Singh**
*Dehriwal Droga*



**Pr. Rajkumar**
*Kurali*



**Pr. Rajesh**
*Mahatpur*



**Pr. Simson**
*Karnataka*



**Pr. Happy Masih**
*Sarspur*



**Pr. Jirma Lal**
*Bazara*



**Pr. Caleb**
*Delhi*



**Pr. Heral Kaddara**
*Rajasthan*



**Pr. Arionp Kumar**
*Ajimar*



**Bro.Sam Guna Seelan**
*Sharing Love Mission*



**Pr. Kamal Deep**
*Punjab*



**Pr. Godson Joy**
*Punjab*



**Pr. Harjeet Kaur**
*Nawashar*



**Pr. Jaswinder Kumar**
*Delhi*



**Pr. Pritam Singh**
*Rajasthan*



**Pr. Sonu**
*Makhu*



**Pr. Patras Masih**
*Feruyzepur*



**Pr.Dhananjay Nokman**
*Assam*



**Pr. Jinod Rabha**
*Assam*



**Bro. Prakash**
*Shalom Charity Trust*



**Sis. Sugantha**
*Shalom Charity Trust*



**Bro. Joshua Bhuriya**
*Shalom Charity Trust*



**Sis. Karuna K. Damor**
*Madhya Pradhesh*

**மிஷனெரி ஊழியத்திற்கு உங்களால் இயன்றதை அனுப்பி தாங்கலாம்.**

**எங்களது வங்கி கணக்கு எண்:**

**Name** : Assembly of God Pudukottai
**Bank** : TMB
**A/c No.** : 035100140450007
**IFSC Code** : TMBL0000035
**Branch** : Pudukottai, Tuticorin.

# பராமரிப்புக் குழு

| டிவிஷன் எண் | டிவிஷன் தலைவர் | பராமரிப்புக்குழுக்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | Bro. வேதமுத்து, Sis. கவிதா | 16 |
| 02 | Bro. தனராஜ், Sis. எஸ்தர் | 18 |
| 03 | Bro. அற்புதராஜ், Bro. யாக்கோபு | 19 |
| 04 | Pr. ராஜன், Sis. கோயில் செல்வி | 24 |
| 05 | Bro. ரூபன், Sis. பேன்சி | 16 |
| 06 | Bro. சாமுவேல் பீட்டர், Bro. பால் | 14 |
| 07 | Sis. ஜெயா , Sis.அமுதா | 11 |
| 08 | Sis. மேரி செல்வி, Sis. தேன்மொழி | 15 |
| 09 | Sis. வசந்தா , Sis. காஞ்சனா | 16 |
| 10 | Sis. சாராள் ஜெயராணி, Bro. சதீஷ் | 12 |
| 11 | Sis. பொன்செல்வி, Bro. அலைக்ஸ் | 19 |
| 12 | Bro. ஜெபஞான குணசிங், Bro. இம்மானுவேல் | 13 |

**உங்கள் பகுதியில் செயல்படும் பராமரிப்புக் குழுக்கள் பற்றியும் நடைபெறும் நேரத்தை பற்றியும் தெரிந்து கொள்ள கொடுக்கப்பட்டுள்ள QR Code ஐ Scan செய்யவும்.**

# சாட்சிகள்

● கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக, நான் அரசு வேலைக்காக படித்துக் கொண்டு இருந்தேன். கடந்த ஆண்டு 16.12.2024 அன்று வேலையில் நியமிக்கப்பட்டு training முடித்து 16.08.2025 அன்று திருநெல்வேலியில் posting கிடைத்தது. வேலையை எனக்குக் கொடுத்த இயேசுவுக்கு கோடான கோடி நன்றி. இதற்காக ஜெபித்து, என்னை உற்சாகப்படுத்திய பாஸ்டர், பாஸ்டர் அம்மாவிற்கும் நன்றி.

–Sis. பானுப்பிரியா, புதுக்கோட்டை

---

● கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக, நாங்கள் இருந்த சொந்த வீட்டில் எங்களை (பராமரிப்பு குழு) ஊழியம் செய்ய விடாதபடி பக்கத்து வீட்டு மனுஷர்கள் இந்த தெருவில் இருந்து எங்களை வெளியேற்ற முயற்சி செய்தனர். கண்ணீரோடு அமாவாசை ஜெபத்தில் ஒப்புக்கொடுத்து ஜெபித்தேன். பிரச்சனை கொடுத்தவர்கள் வெட்கப்படத்தக்கதாய் 2 சென்ட் வீட்டிலிருந்த எங்களுக்கு அதே தெருவில் 6 சென்ட் நிலம் வாங்கி வீட்டு வேலை துவங்க " சிறப்பான சுதந்திரம்" பெற தேவன் தயவு பாராட்டினார். ஜெபித்த, ஆலோசனை கொடுத்த பாஸ்டர் ஐயாவுக்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

–Bro. செந்தில் குமார், தூத்துக்குடி

---

● என்னுடைய தம்பி மனைவிக்கு கர்ப்பப்பையில் கட்டி இருந்தது. கடந்த வாரத்தில் பேய்க்குளத்தில் நடந்த பெண்கள் கூட்டத்தில் பாஸ்டரம்மாவிடம் சொல்லி ஜெபித்தோம். அதற்கு மறுநாள் கர்ப்பப்பையில் இருந்த கட்டி தானாக வெளிவந்து விட்டது. ஆப்ரேசன் எதுவும் செய்யாமல் தேவன் தந்த அற்புத சுகத்திற்காக ஸ்தோத்திரம். ஜெபித்த பாஸ்டர் அம்மாவிற்கு நன்றி.

–Bro. ஜான்சன், பேய்க்குளம்

---

● கர்த்தருக்கு ஸ்தோத்திரம், நான் 9 வயதிலிருந்து volley ball விளையாடி வருகிறேன். ஆனால் எனது 15 வயது வரை மாநில அளவில் போட்டிகளில் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கவில்லை. தேவ கிருபையால், இந்த வருடத்தில் நான் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் விளையாடபோகிறேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

–Sis. Fiona, தூத்துக்குடி


A.G திருமண இணைப்பு ஊழியம்

1. சனி மற்றும் ஞாயிறு தவிர மற்ற நாட்களில் காலை 10:00–12:30 மணி வரை சபை அலுவலகத்திற்கு நேரில் வரலாம்.
2. தற்போது எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் 4 தேவை.
3. அலுவலகத்திலுள்ள விண்ணப்ப படிவத்தை நிரப்பித்தர வேண்டும்.
4. விண்ணப்பிப்பவர் இரட்சிக்கப்பட்டு, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும்.
5. பதிவு கட்டணம் ரூ.10/– மட்டும்.

மேலும் விவரங்களுக்கு எங்களது அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

செல்: 9345712349 விண்ணப்ப படிவம் QR Code ல் இணைக்கப்பட்டுள்ளது.



அமாவாசை ஜெபம்

22 அக்டோபர் புதன்

செய்வினைகள், பில்லிசூனியம், அசுத்த ஆவிகளின் போராட்டங்கள் மேற்கொள்ள ஜெபிக்க வாருங்கள்.

இடம்: கெத்சமனே பிரேயர் பார்க் (தேரி)

நேரம்: இரவு 10.00–12.30 மணி வரை

13 வயதிற்க்கு மேல் உள்ள வாலிபர்கள் மற்றும் ஆண்கள் பங்கு பெறலாம்.

வாருங்கள் ஆசீர்வதிக்கப்படுங்கள்...

பொறுப்பு: Pr. ராஜன் (உதவி ஊழியர்)

LOCATION

# குறுக்கெழுத்துப் போட்டி

Sis. சாந்தா

## அக்டோபர் 2025
### யோவான் 1-11 அதிகாரம் வரை

முக்கிய குறிப்பு: உங்களுடைய பதில்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் நிரப்பி, வசன இருப்பிடத்தையும் எழுதி அனுப்பவும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | | |
| | 3 | | | | | 4 |
| | | | | 5 | | |
| 6 | 7 | | | | | |
| | | | | 8 | 9 | |
| | | 10 | 11 | | | |
| | | | | 12 | 13 | |

**வலமிருந்து இடம்**

01. யார் விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் என்றார்?
05. என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீருள்ள எவைகள் ஓடும் என்றார்?
08. பெதஸ்தா குளம் எருசலேமில் எந்த வாசலருகே இருக்கிறது?
12. தன் சகோதரனிடம் மேசியாவைக் கண்டோம் என்றது யார்?

**இடமிருந்து வலம்**

02. கூலியாள் எது வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்?
03. யார் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும் என்றார்?
07. எதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம்?
11. அநேகர் அவரிடத்தில் யார் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை என்றார்கள்?
13. எது உயிர்ப்பிக்கிறது என்றார்?

**மேலிருந்து கீழ்**

04. எது செய்கிறவன் ஒளியைப் பகைக்கிறான்?
06. எந்தக் கடல் கலிலேயாக்கடல் என்னப்பட்டது?
07. சமாரியாவிலுள்ள எந்த ஊரில் யாக்கோபுடைய கிணறு இருந்தது?
10. எதின்படி தீர்ப்புச் செய்யுங்கள் என்றார்?

**கீழிருந்து மேல்**

04. பிசாசானவன் எது பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்?
06. யார் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறான்?
09. யார் வந்து அந்த மனுஷன் பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்றார்கள்?

**20ம் தேதிக்குள் தபால் மூலம் அனுப்பவும் அல்லது அலுவலகத்தில் நேரடியாக கொடுக்கவும்**

## பரிசு பெறும் 3 நபர்கள்

1. Sis. லில்லி ஜெயக்குமார், கடையம்
2. Sis. லிபினா, கிருஷ்ணராஜபுரம்
3. Sis. S. செல்வா, இருவப்பபுரம்

## எங்களது வங்கி கணக்கு எண்:

**இந்த செய்தி மலர் ஊழியத்திற்க்காக ஜெபியுங்கள். இதன் தேவை சந்திக்கப்பட காணிக்கை அனுப்பலாம்,**

**Name : J. Samuel Jebaraj**
**Bank : ICICI - Bank**
**A/c No. : 613901506045**
**IFC Code : ICIC 0006139**
**Branch : Tuticorin**

*UPI ID:*
**prjsjebaraj@okaxis**

## இந்த மாதம் போதகர் செல்லும் ஊழியங்கள்:

02.10.2025 - வியாழக்கிழமை
**பிரதேச ஆண்கள் முகாம் - மதுரை**

03.10.2025 - வெள்ளிக்கிழமை
**முழு இரவு ஜெபம் - திருசெந்தூர்**

07.10.2025 - செவ்வாய்க்கிழமை
**போதகர்கள் கூடுகை - திருநெல்வேலி**

08,09.10.2025 - புதன், வியாழன்
**இளம் போதகர்கள் கருத்தரங்கு - கோவை**

20.10.2025 - திங்கட்கிழமை
**வாலிபர் முகாம் - திண்டுக்கல்**

21.10.2025 - செவ்வாய்க்கிழமை
**முழு இரவு ஜெபம் - தூத்துக்குடி**

22.10.2025 - புதன்கிழமை
**அமாவசை ஜெபம் - பிரையர் பார்க்**

24.10.2025 - வெள்ளிக்கிழமை
**முழு இரவு ஜெபம் - கோவில்பட்டி**

29.10.2025 - புதன்கிழமை
**போதகர்கள் கூடுகை - திருச்சி**

## ஞாயிறு தோறும் 5 ஆராதனைகள்

1 – வது ஆராதனை - காலை 06:00–07:30

2 – வது ஆராதனை - காலை 08:30–10:00

3 – வது ஆராதனை - காலை 11:00–12:30

4 – வது ஆராதனை -மாலை 05:00–06:00 ஹிந்தி

5 – வது ஆராதனை - மாலை 06.30–08:00

**உபவாச ஜெபம்**

சனிதோறும் காலை 10:00 – 12:30

**பெண்கள் ஆராதனை**

செவ்வாய்தோறும் காலை 10:00 – 11:30

**அதிகாலை ஆராதனை**

தினந்தோறும் காலை 6:00 – 6:40

**அமாவாசை ஜெபம்**

அமாவாசை இரவு 10:00 – 12:30

**சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். எபி 10:25**




எங்கள் முகவரி:

Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்

பரிசுத்த பர்வதம் ஏ.ஜி சபை, சீயோன் நகர்,
புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் – 628 103,
தமிழ்நாடு, இந்தியா.

www.hmagchurch.in
holymountainag@gmail.com
+91 98421 71014, +91 6369097825
+91 93457 12549

ABOUT US

SCAN ME

To ....................................................................................................

....................................................................................................

....................................................................................................